நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வெளிமார்க்கெட்டிலும் டி.ஏ.பி. உரம் விற்பனை**

First Published : 28 Nov 2010 12:59:36 PM IST

சேலம், நவ. 27: சேலம் மாவட்டத்தில் தனியார் உர விற்பனை நிலையங்களிலும் டி.ஏ.பி. உரம் விற்பனை செய்யப்படுவதாக வேளாண் இணை இயக்குநர் க. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சேலம் மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் 23 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 20 ஆயிரம் ஹெக்டேரில் சிறு தானியங்களும், 10 ஆயிரம் ஹெக்டேரில் பருத்தி, 8 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பும் பயிரிடப்பட்டுள்ளது. இந்த பயிர்களுக்கு போதுமான ரசாயன உரங்கள் கையிருப்பில் உள்ளன. இந்த மாதத்தில் மட்டும் 3,980 டன் யூரியாவும், 3,045 டன் காம்ப்ளக்ஸ் உரங்களும் தனியார், கூட்டுறவு சங்கங்களுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

இப்போது 4,121 டன் யூரியாவும், 1,457 டன் டி.ஏ.பி., 1,761 டன் பொட்டாஷ், 4,140 டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் கூட்டுறவு, தனியார் விற்பனையாளர்களிடம் இருப்பில் உள்ளது. விவசாயிகளுக்கு உரம் முறையாக வினியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேளாண்மைத்துறையின் உர ஆய்வாளர்கள் தொடர்ந்து உர விற்பனை, போக்குவரத்தை கண்காணித்து வருகின்றனர்.

மேலும் விவசாயிகளுக்கு அரசு மானிய விலையில் உரம் விற்பனை செய்து வருகிறது. இதுவரை கூட்டுறவு சங்கங்களில் மட்டுமே விற்பனை செய்யப்பட்ட டி.ஏ.பி. உரம், அரசு உத்தரவால் தனியார் உர விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் டிசம்பர் மாத உபயோகத்துக்கு தேவையான உரங்களை இருப்பு வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உர விற்பனையில் முறைகேடு, பதுக்கல் இருந்தால் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநருக்கோ (0427 - 2451050), வேளாண் உதவி இயக்குநருக்கோ (தரக்கட்டுப்பாடு) 99449 80419, வட்டார வேளாண் உதவி இயக்குநருக்கோ நேரிடையாகவோ, தொலைப்பேசி மூலமாகவோ விவசாயிகள் தகவல் தெரிவிக்கலாம் என்று உதயகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத்தொகை அளிப்பு**

First Published : 28 Nov 2010 02:12:23 PM IST

ஆரணி, நவ.27: ஆரணி பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத்தொகை மற்றும் பல்வேறு கடன் தொகைகளை ஆரணி எம்எல்ஏ ஆர்.சிவானந்தம் புதன்கிழமை வழங்கினார்.

ஆரணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், 5 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ. 7.43 லட்சம், சொட்டு நீர்ப்பாசனம் செய்ய 3 பேருக்கு ரூ. 1.26 லட்சம், 139 பேருக்கு பயிர் காப்பீட்டுத்தொகை ரூ. 18 லட்சத்து 24 ஆயிரம் வழங்கப்பட்டன.

ஆதனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், 15 மகளிர் குழுக்களுக்கு ரூ. 5.50 லட்சம், மாற்றுத்திறனாளி ஒருவருக்கு ரூ. 25 ஆயிரம் கடன், சொட்டு நீர்ப்பாசனம் செய்ய ரூ. 1.5 லட்சம், 123 பேருக்கு பயிர் காப்பீட்டுத்தொகை ரூ. 13 லட்சத்து 85 ஆயிரம் வழங்கப்பட்டன.

எஸ்.வி.நகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், 237 பேருக்கு பயிர் காப்பீட்டுத்தொகை ரூ. 23.53 லட்சம் வழங்கப்பட்டது. மட்டதாரியில் 52 பேருக்கு பயிர் காப்பீட்டுத்தொகை ரூ. 4 லட்சம் வழங்கப்பட்டது.

திமுக நகரச் செயலர் ஏ.செல்வரசு, ஒன்றியச் செயலர் எஸ்.எஸ்.அன்பழகன், முன்னாள் எம்எல்ஏ தயாநிதி, களமேலாளர் ராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

**காவிரி நடுக்கரை பகுதியில் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கின**

First Published : 28 Nov 2010 01:05:09 PM IST

திருவெறும்பூர்,நவ. 26:திருச்சி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக காவிரி நடுக்கரை பகுதியில் சுமார் 200 ஹெக்டேர் சம்பா சாகுபடி பயிர்கள் தண்ணீரால் சூழப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருவதால் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்து வருகின்றது. திருச்சியில் கடந்த சில நாள்களாக விட்டு விட்டு மழை பெய்தது.

வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பெய்த பலத்த மழையால் திருச்சி மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகமானதால் முக்கொம்பிலிருந்து காவிரியில் தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டு, கொள்ளிடம் ஆற்றில் கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை பெய்த தொடர் மழை காரணமாக நீர்வரத்து அதிகமானதால் அந்தநலூர் ஒன்றியம், காவிரி நடுக்கரை பகுதியான கொளத்தரசநல்லூர், கிளிக்கூடு, பணையபுரம், உத்தமர்சீலி போன்ற பகுதியில் பயிரிடப்பட்ட சுமார் 200 ஹெக்டேர் சம்பா பயிர்கள் கொள்ளிடம் ஆற்று நீரால் சூழப்பட்டுள்ளன.

இதனால் பயிர்கள் அழுகிவிடும் என்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேலும், இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வாழைகள் தற்போது பூ விடும் நிலையில் உள்ளன. இந்த நீரால் வாழைகள் சாய்ந்துவிடும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

திருவெறும்பூர் பகுதிக்குள்பட்ட அசூர் பெரியகுளம், கூத்தைப்பார் பெரியகுளம், குண்டூர் குளம் உள்ளிட்ட குளங்கள் மழை நீரால் நிரம்பி வருகின்றன.

உய்யகொண்டான் ஆற்றில் தாமதமாக தண்ணீர் திறந்து விடப்பட்டதால் திருவெறும்பூர், வேங்கூர், நடராஜபுரம், குவளக்குடி, கூத்தைப்பார், பாப்பாக்குறிச்சி, எல்லக்குடி, கீழமுல்லக்குடி, பணையபுரம், ஆலத்தூர், கீழக்கல்கண்டார்கோட்டை, கீழக்குறிச்சி, சோழமாதேவி, நவல்பட்டு, அசூர், திருநெடுங்குளம் போன்ற பகுதியில் தற்போது தான் சம்பா சாகுபடி நடவு பணிகள் முடிந்து முதல்கட்ட களை எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொடர் மழையால் பயிர்கள் மழைநீரில் மூழ்கிவிடுமோ என்று திருவெறும்பூர் பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இந்நிலையில், காட்டூர் பகுதியில் மழைநீர் வடியாததால் காட்டூர் அண்ணாநகர், வேணுகோபால் நகர் போன்ற பகுதியில் மழைநீர் சூழ்ந்துள்ளதால் அப்பகுதியைச் சேர்ந்தோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**"சிறு விவசாயிகளைக் காக்கும் திட்டங்கள் வேண்டும்'**

First Published : 28 Nov 2010 01:04:09 PM IST

திருச்சி, நவ. 27: சிறு விவசாயிகளைக் காப்பதற்கான அடிப்படைத் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும் என்றார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லகண்ணு.

திருச்சியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற நிலம் - நீர் - உணவுப் பாதுகாப்பு மாநாட்டில் அவர் மேலும் பேசியது:

"தமிழகத்தில் நீர் நிலைகளைப் பாதுகாக்க முடியவில்லை. தற்போது பெய்து கொண்டிருக்கும் மழைநீரைக் கூட சேமித்து வைக்க வாய்ப்பு இல்லை.

காவிரி பிரச்னைக்காகத் தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. ஆனால் நிரந்தர தீர்வு ஏற்படுத்தப்படவில்லை. விவசாயிகளின் தண்ணீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும். நம்முடைய வாழ்க்கை முறைக்கு மாறாக, தவறான பாதையில் நாடு சென்று கொண்டுள்ளது. பொருளாதாரத் திட்டங்கள் மக்களுக்கு பயன்தரக்கூடியதாக இல்லை.

2010 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் சுமார் 120 கோடி மக்கள் உள்ளனர். அனைவருக்கும் உணவு, இருப்பிடம், குடிநீர் ஆகியவை தேவை. அரசு, இத்தனை கோடி மக்களையும், நிலங்களையும் குறித்து கவலைப்படவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி அண்மையில் நம் நாட்டுக்கு வந்த போது, அணு சக்தி, விவசாயம், வியாபாரம் உள்ளிட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

அமெரிக்காவின் பண்ணை முறை விவசாயத்தை நம் நாட்டில் கொண்டு வர முயற்சிக்கிறார்கள். அந்த முறை கொண்டு வரப்பட்டால் 20 கோடி விவசாயிகள் வேலை இழப்பார்கள். சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற திட்டத்துக்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஒப்படைக்கக் கூடாது. சிறு விவசாயிகளைப் பாதுகாக்க அடிப்படை திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். தற்போது ஏற்படுத்தப்படும் திட்டங்கள் மக்களுக்கான திட்டங்களாக இல்லாமல், லாபத்தை அடிப்படையான திட்டங்களாக உள்ளன' என்றார் அவர். கூட்டத்தில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் வே. துரைமாணிக்கம் நீர் ஆதாரமும், நிரந்தர தீர்வும் என்ற தலைப்பில் பேசினார்.

தமிழ்மாநில விவசாய தொழிலாளர்கள் சங்க மாநில பொருளர் நா. பெரியசாமி வறுமைக் கோடு - நிழலும், நிஜமும் என்ற தலைப்பில் பேசினார்.பாமயன், மரபீனி மாற்றமும், மரபு வழி விவசாயமும் என்ற தலைப்பில் பேசினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணை செயலர் த. இந்திரஜித்,உணவு நெருக்கடி என்ற தலைப்பில் பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநிலக் குழு உறுப்பினர் எம். செல்வராஜ் நிலச் சீர்திருத்தமும், நில மோசடியும் என்ற தலைப்பில் பேசினார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

புதிய நீர் நிலைகளை உருவாக்க வேண்டும், காமராஜர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட அய்யாறு, திருத்திய மலை, ஏரி இணைப்புக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்,

காவிரி, சரபங்கா, திருமணிமுத்தாறு, கரைபட்டனாறு, அய்யாறு இணைப்புக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றவேண்டும். வறுமைக்கோடு குறித்த புதிய கணக்கெடுப்பை நடத்தவேண்டும். நிலச் சீர்திருத்தம் செய்ய வேண்டும், பொது விநியோகத்திட்டத்தை பலப்படுத்த வேண்டும். பாரம்பரிய விவசாயத்தை பாதுகாத்தல் வேண்டும், "பிளாஸ்டிக்' பைகளைத் தடை

செய்ய வேண்டும். நீர் மாசுபடுவதைத் தடுக்க வேண்டும், மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

தினமலர்

**துவரையில் அதிக மகசூல் பெற வேளாண் துணை இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2010,01:23 IST

தர்மபுரி: துவரையில் அதிக மகசூல் பெறுவது குறித்து வேளாண் துணை இயக்குனர் அறிவுரை வழங்கியுள்ளார். தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் மூலம் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி முகாம் பென்னாகரம் ஒன்றியம் அரங்காபுரத்தில் நடந்தது. வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் தலைமை வகித்து பேசியதாவது: மானாவாரி பயிர்களுக்கு விவசாயிகள் பெரும்பாலும் உரமிடுவதில்லை. நமது மாவட்டத்தில் மானாவாரியில் துவரைப்பயிர் அதிக பரப்பில் பயிர் செய்யப்பட்டுள்ளது.

தற்போது, துவரை செடிகளில் பூக்கள் பூத்து வருகிறது. பூக்கள் உதிர்வதை தடுக்க விளைச்சல் அதிகப்படுத்த பூக்கும் தருணத்திலும் மற்றும் 15 நாட்கள் கழித்தும் இலை வழி உரமாக ஏக்கருக்கு 4 கிலோ டிரபி உரத்தினை 10 லிட்டர் நீரில் முதல் நாள் மாலையில் ஊற வைத்து மறு நாள் காலையில் தெளிந்த நீரை 190 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலையில் தெளித்தால் அதிக மகசூல் பெறலாம்.கார்த்திகை, மார்கழி பட்டத்தில் இறவையில் நிலக்கடலை பயிர் சாகுபடியின் போது முக்கிய கவனிக்க வேண்டியது பயிர் எண்ணிக்கை பராமரித்தல் மற்றும் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு நல்ல திரட்சியான காய்களுடன் கூடுதல் மகசூல் பெறலாம். ராகி நடவு செய்யும் போது 17 நாள் வயதுடைய நாற்றை நடவு செய்தல் மிக முக்கியமாகும்.

நாற்றின் வயது ஒவ்வொரு நாள் கூட, கூட ஒரு நாளுக்கு ஒரு மூட்டை என்ற வீதம் மகசூல் குறையும். இவ்வாறு அவர் பேசினார். தோட்டக்கலை பயிர்களில் மா பெண் தண்டு, ஒட்டு நடவின் பயன்கள், மா நெருக்கு நடவு முறைகள் குறித்தும் விளக்கப்பட்டது. உயிர் உரங்கள் பயன்பாடு பற்றி செயல்விளக்கம் மூலம் வேளாண் அலுவலர் அமுதவள்ளி செய்து காண்பித்தார். அரசின் மானிய திட்டங்கள் குறித்து பட்டு வளர்ச்சி துறை இளநிலை ஆய்வாளர் சுந்தர்ராஜனும்,

விவசாயிகள் விளை பொருட்களை சந்தைப்படுத்துவது குறித்து ஒழுங்கு முறை விற்பனை கூட மேற்பார்வையாளர் சுதர்ஸன் விளக்கினார். ஏற்பாடுகளை உழவர் விவாதக்குழு அமைப்பாளர் ஜெயபாலன் செய்திருந்தார்.

**தொடர் மழையால் நெற்பயிர் பாதிப்பு காப்பீடு செய்ய டிச.15 கடைசி நாள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2010,02:42 IST

மதுரை: ""மழை, பூச்சித் தாக்குதலால் இழப்பு ஏற்படும் நெற்பயிர்களுக்கு காப்பீடு செய்ய டிச.15 கடைசி நாள்,'' என விவசாய அதிகாரி தெரிவித்துள்ளார். மதுரை கிழக்கு யூனியன் பாசன பகுதிகளில் நடவு முடியும் தறுவாயில் உள்ளது. தற்போது பெய்யும் மழை தொடர்ந்தால் நெற் பயிர்கள் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. வானிலை மப்பும் மந்தாரமுமாக உள்ளதால் பூச்சித் தாக்குதலும் ஏற்படலாம். விவசாய உதவி இயக்குனர் எஸ்.கனகராஜ் கூறியதாவது: பயிருக்கு வரும் இடர்ப்பாடுகளை சமாளிக்க, பயிர்க்காப்பீட்டு திட்டத்தை பயன்படுத்தலாம்.

சிறு,குறு விவசாயிகளுக்கு பிரிமிய தொகையில் 50 சதவீதத்தை அரசே செலுத்தும். விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு மானியம் போக, 120 ரூபாயை செலுத்தினால் போதும். பயிர்களுக்கு இழப்பு ஏற்பட்டால், ஒரு ஏக்கருக்கு இழப்பீடாக 13 ஆயிரத்து 500 ரூபாய் கிடைக்கும். இதில் சேர டிச. 15 கடைசி நாள். இதற்கு விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழுடன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பிரிமிய தொகை செலுத்த வேண்டும். உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால், "94432 93406'ல் புகார் தெரிவிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

**மழையால் நெல் அறுவடை பாதிப்பு வெளியூர் தொழிலாளர்கள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2010,03:26 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் இருபது நாட்களுக்கும் மேலாக மழை பெய்து வருகிறது. பல இடங்களில் பலத்த மழை காரணமாக, குடியிருப்புக்குள் தண்ணீர் புகுந்தது. மழை ஈரத்துக்கு பல வீடுகள் சேதமடைந்து, இடிந்து விழுந்தன. வெள்ளமென பாய்ந்து ஓடிய மழை நீர், நூற்றுக்கணக்கான விவசாய நிலத்தை முற்றுகையிட்டது. பயிரிடப்பட்டிருந்த மஞ்சள், வாழை, கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர்கள் வெள்ளத்துக்கு இரையாயின. தரைமட்ட பாலங்கள் நாசமாயின.

காலிங்கராயன் பாசன பகுதியில், நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நெல் பயிர் பயிரிடப்பட்டன.
நன்கு விளைந்த நிலையில் உள்ள நெற்பயிர்கள் அறுவடைக்கு தயாராகவுள்ளன. தற்போதைய சூழலில், காலிங்கராயன் பாசன பகுதியிலும் பலத்த மழை பொழிகிறது. மழையின் தீவிரம் குறைந்து போகும்பட்சத்தில், அறுவடையை துவக்கலாம் என எண்ணிய விவசாயிகள், மணப்பாறை, கரூர் உள்ளிட்ட பகுதியிலிருந்து நெல் அறுவடை தொழிலாளர்களை வரவழைத்துள்ளனர். நெல் பயிர்களை அறுவடை செய்ய, 60க்கும் மேற்பட்ட ஆண், பெண் தொழிலாளர்கள் ஒரு வாரத்துக்கு முன்னரே ஈரோட்டுக்கு வந்து விட்டனர். ஆனால், காலிங்கராயன் பாசன பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால், நெல் பயிர்கள் அறுவடை செய்ய முடியாத நிலையில் உள்ளது. கூலியை நம்பி சொந்த மாவட்டத்தை விட்டு இடம் பெயர்ந்திருக்கும் நெல் அறுவடை தொழிலாளிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். பல ஆயிரம் ரூபாய் முதலீடு செய்து அறுவடைக்கு காத்திருந்த விவசாயிகளும் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

கரூர் அருகே வீராப்பூரை சேர்ந்த தொழிலாளிகள் கூறியதாவது: ஈரோடு பகுதியில் விளைந்துள்ள நெல் பயிர்களை அறுவடை செய்ய விவசாயிகள் அழைத்து வந்தனர். ஒரு வாரத்துக்கும் மேலாக நீடிக்கும் கனத்த மழையால், அறுவடை செய்ய முடியாத நிலை உள்ளது. தினமும் காலையில், தங்கியுள்ள இடத்திலிருந்து அறுவடை நிலத்துக்கு வருவதும், மழையால் மீண்டும் செல்வதும் வழக்கமாக உள்ளது. ஒரு வாரம் எந்த வேலையும் இல்லாத நிலையில், கையில் வைத்திருந்த பணம் செலவாகிவிட்டது. அறுவடை செய்ய முடியாத சூழ்நிலையில், விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**மழை: 1880 எக்டேர் பயிர் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2010,02:48 IST

மதுரை: ""மதுரை மாவட்டத்தில் 1880 எக்டேர் சாகுபடி நிலம் மழை நீரில் மூழ்கியுள்ளது,'' என கலெக்டர் சி.காமராஜ் தெரிவித்தார். மதுரை பகுதியில் பெய்யும் மழையால் வண்டியூர் கண்மாய் நிரம்பியது. இக்கண்மாயை நேற்று அமைச்சர் தமிழரசி, கலெக்டர் காமராஜ், ஆர்.டி.ஓ., சுகுமாறன், தாசில்தார் அர்ச்சுனன் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர். அவர்கள் நிருபர்களிடம் கூறியதாவது: வண்டியூர் கண்மாய் 1996ல் தூர்வாரப்பட்டது. இக்கண்மாய் கரையை சீரமைக்கவும், ஆழப்படுத்தவும் 43 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் மழைநீரால் 1880 எக்டேர் சாகுபடி நிலம் மூழ்கியுள்ளது. 302 வீடுகள் சேதமடைந்துள்ளன.

10 பேர் இறந்துள்ளனர். இதில் ஐந்துபேர் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மற்ற குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.  வெள்ள சேதத்தின் மதிப்பு, மழை நீர் வடிந்த பின்பு அரசுக்கு அறிக்கையாக அனுப்பப்படும். மதுரையில் அக்டோபருக்குப்பின் சராசரிக்கும் கூடுதலாக 650 மி.மீ., மழை பெய்துள்ளது. தமிழகத்தில் அதிக மழை பெற்றதில் மதுரை மூன்றாவது இடத்தில் உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வணிக ரீதியான பண்ணையம் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2010,01:09 IST

கரூர்: கரூர் அருகே, பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் இன்று (29ம் தேதி) ஒரு நாள் வணிக ரீதியான சிறிய கறவை மாட்டு பண்ணையம் அமைத்தல் குறித்த பயிற்சி முகாம் நடக்கிறது. பயிற்சியில் கறவை மாடு வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய் மற்றும் அவற்றை தடுக்கும் முறை, விற்பனை உத்திகள் மற்றும் பண்ணை பொருளாதாரம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு ,களப்பயிற்சியும் வழங்கப்படுகிறது. "பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், இன்று காலை 10 மணிக்கு பயிற்சி மையத்தில் இருக்க வேண்டும்' என, மைய இணைப்பேராசிரியர் செந்தில்வேல் அறிவித்துள்ளார்.

**இயந்திரம் மூலம் நடவு பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2010,02:30 IST

சிவகாசி: சிவகாசி ஆட் நிறுவனம், நபார்டு வங்கி சார்பில் மக்காச்சோளம் நடவு இயந்திர பயிற்சி ஸ்ரீவில்லிபுத்தூர், வெம்பக்கோட்டை பகுதியில் உள்ள நான்கு கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டன. திட்ட ஒருங்கிணைப்பாளர் முரளி கிருஷ்ணசாமி துவக்கி வைத்தார். செயலாளர் ரமேஷ்குமார் ஏற்பாடு செய்தார்.

**அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு அண்ணா பதக்கம் வழங்க முடிவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,22:31 IST

வடமதுரை: அதிக மகசூல் எடுத்து முதலிடம் பெறும் விவசாயிக்கு வரும் குடியரசு தின விழாவில் முதல்வரால் அண்ணா பதக்கம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பங்கு பெறும் விவசாயிகள் குறைந்தது 50 சென்ட் பரப்பில் சாகுபடி செய்திருக்க வேண்டும். பங்கு பெறுபவர் நில சொந்தம், குத்தகைதாரராக இருக்கலாம். ராஜராஜன்-1000, சாதாரண நெல் சாகுபடி, உளுந்து,பாசிப்பயிரில் அதிக உற்பத்தி திறன் போன்ற சாகுபடி முறைகளில் உற்பத்தி திறனை நிரூபிக்கலாம். நெல்லுக்கு ரூ.150-ம், பயிறு வகைகளுக்கு ரூ.50-ம் செலுத்த வேண்டும். அறுவடை செய்யவுள்ள தேதியினை விவசாயிகள் 15 நாட்களுக்கு முன்னதாக தெரிவிக்க வேண்டும். நெல்லில் ஏக்கருக்கு 2,500 கிலோவும், பயிறு வகையில் 200 கிலோவும் குறைந்தபட்ச உற்பத்தி திறன் கொண்டிருக்கும் விவசாயிகள் மட்டும் பங்கு பெறலாம். விபரங்களுக்கு வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம் என உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**தஞ்சையை தொடர்ந்து திருவாரூரிலும் விதை நெல் மாற்றி வழங்கியதால் விவசாயிகள் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,02:57 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி யூனியன் கொத்தமங்கலம், பாமணி, சிங்களாந்தி பகுதியில் சம்பா நெல் விதைகள் தனியார் நிறுவனங்களில் வாங்கி நடவு செய்ததில் சி.ஆர்.1009 நெல் ரகம் நடவு செய்து 70 நாட்களில் கதிர் வந்துள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர். தனியார் விற்பனை நிறுவனங்களில் இழப்பீடு தர விவசாயிகள் வேளாண்மை துறைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருத்துறைப்பூண்டி யூனியன் முழுவதும் சம்பா பயிரிடப்பட்டுள்ளது. இதில், சி.ஆர்.1009 நெல் ரகம் அரசு விதைப்பண்ணைகளில் போதுமான அளவு கிடைக்காத நிலையில் தனியார் விற்பனை நிலையங்களில் அரசு மானியத்துடன் 1009 ரகம் மற்றும் அனைத்து ரக நெல்கள் வாங்கி விவசாயிகள் சாகுபடி செய்தனர். திருத்துறைப்பூண்டியில் தனியார் விதை விற்பனை நிலையங்களில் வாங்கிய சி.ஆர்.1009 நெல் ரகங்கள் 115 நாட்களில் கதிர் வர வேண்டி நிலையில் 70 நாட்களுக்குள் நெற்கதிர் வந்ததால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர்.

அரசு 18 சதவீதம் விதைகளை மட்டுமே விற்பனை செய்துள்ளது. மீதுமுள்ள 82 சதவீத நெல்லை தனியார் துறைகளே, சேமித்து வைத்துள்ள விதைகளை விற்கிறது. திருத்துறைப்பூண்டி யூனியன் கொத்தமங்கலம், பாமணி, சிங்களாந்தி உட்பட பல பகுதிகளில் தனியார் கடையில் சி.ஆர்.1009 நெல் ரகம் வாங்கி விதைத்துள்ள விவசாயிகள் வயல்களில் 25 சதவீதம் கதிர் வந்துள்ளது. 25

சதவீதம் தொண்டை கதிராகவும் உள்ளது. 50 சதவீதம் பயிராக உள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பட்டுக்கோட்டை பகுதியில் அரசு வேளாண்மை விற்பனை கிடங்குகளில் வாங்கிய சி.ஆர்.1009 நெல் ரகங்களும் இவ்வாறு 80 நாட்களில் கதிர் வந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் பாண்டியன் கூறியதாவது: திருத்துறைப்பூண்டி யூனியன் கொத்தமங்கலம், பாமணி ஆகிய பஞ்சாயத்துக்களில் திருத்துறைப்பூண்டியில் தனியார் கடைகளில் சி.ஆர்.1009 விதை வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் பெறும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். கொத்தமங்கலம் ராஜேந்திரன், பாமணி சேகர் என்ற விவசாயி திருத்துறைப்பூண்டி நகரில் உள்ள தனியார் கடையில் 155 நாள் வயதுடைய சி.ஆர்.1009 விதை வாங்கி முறைப்படி நாற்று விட்டு நடவு செய்துள்ளனர். இந்த ரக நெல் 115 நாட்களுக்கு மேல்தான் கலப்பு கதிர் வர வேண்டும். இவர்களுக்கு 70 நாளிலேயே 25 சதவீதம் கதிர் வந்தும், 25 சதவீகிதம் தொண்டை கதிராகவும், மீதி பயிராகவும் உள்ளது. இது போன்று இந்த பகுதியில் பல விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

போதிய பருவ மழை இன்மையால் பூச்சி நோய் தாக்குதல் அதிகமாகி விவாசாயிகளை வாட்டி எடுக்கும் நிலையில் இது போன்ற நிகழ்வுகள், அதிகாரிகள் மற்றும் வியாபாரிகளின் கவனக்குறைவால் ஏற்பட்ட நஷ்டத்தினால் பல விவசாயிகள் என்ன செய்வதென தெரியாமல் மன உளைச்சலில் உள்ளனர். இதுபற்றி, விவசாயிகள் வோளாண் துறை விதை ஆய்வு உதவி இயக்குனர், வேளாண்மை உதவி இயக்குனருக்கும் புகார் மனு கொடுத்துள்ளனர். போதிய இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

"நமது நெல்லை காப்போம்' மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் கூறுகையில், ""விவசாயிகளுக்கு விதை விநியோக மொத்த தேவையில் 18 சதவீதம் வேளாண்மை துறையும், 82 சதவீதம் விவசாயிகளே விதை தேர்வு செய்து கோட்டை கட்டி பராமரித்து பயன்படுத்தி வந்தார்கள். வீரிய ஒட்டு ரகம் (ஒரு முறை பயிர் செய்யும் ரகம்) என வேளாண் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுப்பிடிப்புகளால் விவசாயிகள் தங்கள் தேவைக்கு விதையை எடுத்து கொள்ளும் நிலையை விவசாயிகள் கைவிட்டு விட்டனர்.

வேலைக்கே ஆள் கிடைக்காத நிலை, அதிக செலவு, இயற்கை சீற்ற பாதிப்பு, இதை மீறி தனியார் விதை கம்பெனிகளின் விதையை வாங்கி விவசாயிகள் மோசம் போவது நடந்து கொண்டே வருகிறது. இதற்கு ஓரே தீர்வு ராஜராஜன் ஆயிரம் நெல் சாகுபடி முறையை கையாள ஏக்கருக்கு

இரண்டு கிலோ மட்டுமே தேவை. இம்முறையில் விவசாயம் செய்து விதைகளை உற்பத்தி செய்து, எடுத்து வைத்து பாதுகாத்து பயன்படுத்தி கொள்ள வேண்டும்," என்றார்.

**கோயம்பேடு மார்க்கெட்டில் கொந்தளிக்கும் புதினா, கொத்தமல்லி விலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,02:07 IST

கோயம்பேடு : பருவமழை தொடருவதால் புதினா, கொத்தமல்லி உற்பத்தி குறைந்து, கோயம்பேடு மார்க்கெட்டில் அதன் விலை தாறுமாறாக ஏற்றம் கண்டுள்ளது.தமிழகத்தில் கிருஷ்ணகிரி, ஓசூர் உள்ளிட்ட பல இடங்களில் இருந்து 80 சதவீதமும், மற்ற மாநிலங்களில் இருந்து 20 சதவீதமும், கோயம்பேடு மார்க்கெட்டிற்கு புதினா வரத்து இருக்கும். இதே போல, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் கொத்தமல்லி வரத்துள்ளது.தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல மாநிலங்களில் கடந்த ஒரு மாதமாக பருவமழை பரவலாக பெய்து வருவதால் புதினா மற்றும் கொத்தமல்லி உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டது.

குறிப்பாக சிறு மழைக்கே கொத்தமல்லி மற்றும் புதினா ஆகியவை அழுகி விடுவதால் கோயம்பேடு மார்க்கெட்டிற்கு வரத்து படிப்படியாக குறைந்து விலை எகிறத் துவங்கியது.அதன் தாக்கமாக, கட்டு ஒரு ரூபாய்க்கு விற்கப்பட்ட கொத்தமல்லி மற்றும் புதினாவின் விலை, நேற்றைய நிலவரப்படி கோயம்பேடு மார்க்கெட்டில் கட்டு ஒன்று கொத்தமல்லி ஐந்து ரூபாய் எனவும், புதினா 10 முதல் 15 ரூபாய் வரையும் விற்கப்பட்டது.காய்கறி விலை சீராக இருந்து வரும் நிலையில், சமையலில் காய்கறியுடன் சேர்த்து பயன்படுத்தப்படும் கொத்தமல்லி மற்றும் புதினாவின் விலை ஏறியுள்ளதால், பல ஓட்டல்களில் புதினா சட்னிக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளது. காய்கறி வாங்குபவர்களுக்கு இலவசமாக கொடுக்கப்படும் கருவேப்பிலை கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் என விலை எகிறியுள்ளதால், அதற்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இனி காசு கொடுத்தால் தான் கருவேப்பிலை கிடைக்கும் என்ற நிலை உருவாகியுள்ளது.விலை ஏற்றம் குறித்து கோயம்பேடு மார்க்கெட் புதினா, கொத்தமல்லி மொத்த வியாபாரி பாலகிருஷ்ணன் கூறுகையில், "ஐந்து லாரிகளில் வரத்து வர வேண்டிய நிலையில், ஒன்றிரண்டு லாரிகளிலே வருகின்றன. பற்றாக்குறை ஏற்படுவதே விலை உயர்வுக்கு காரணம்' என்றார்.

**மழையால் மரவள்ளி, வெற்றிலை, தக்காளி பயிர்கள் பாதிப்பு : நிவாரணத்துக்கு ஏங்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,00:35 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக தக்காளி, மரவள்ளி, வெற்றிலை உள்ளிட்ட பயிர்கள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. "பயிர் பாதிப்புக்கு நிவாரணம் வழங்கிட வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை காலங்களான ஜூன் முதல் செப்டம்பர் வரையில் 366.2 மி.மீட்டர் மழையும், வடகிழக்கு பருவமழை காலங்களான அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் 311.6 மி.மீ., மழையும் பெய்யும். கடந்த 2005ம் ஆண்டுக்கு பின் மாவட்டத்தில் குறிப்பிட்டு சொல்லும்படியாக பருவமழை பெய்யாததால், விவசாயிகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டனர். மாவட்டத்தில் இறவை பாசனம் மற்றும் மானாவாரி நிலங்களில் நீரின் தன்மைக்கு ஏற்ப சாகுபடி பயிர்களை மாற்றி சாகுபடி செய்து வருகின்றனர்.
தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யாத நிலையில் கடந்த 29ம் தேதி முதல் வங்க கடலில் ஏற்பட்ட குறைந்தழுத்த காற்று தாழ்வு காரணமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடந்த 10 நாட்களாக இடைவிடாமல் மழை பெய்து வருவதால், மாவட்டத்தில் உள்ள நீர் ஆதாரங்கள் அனைத்தும் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

வடகிழக்கு பருவமழையை பொறுத்த வரையில் இந்தாண்டு வழக்கமான சாராசரி மழையை விட கூடுதலாக மழை பெய்திருப்பதால், வரும் நாட்களில் பாசனம் மற்றும் குடிநீர், கால்நடைகளுக்கு தேவையான நீர் தேவை பூர்த்தியடையும் நிலை ஏற்பட்டுள்ளது. விடாமல் பெய்து வரும் மழையால் விவசாய நிலங்களில் அதிக அளவில் நீர் தேங்கியிருப்பதோடு, இரவு நேரங்களில் பெய்யும் மழைக்கு அதிக அளவில் பல்வேறு பகுதியில் இருந்து வரும் தண்ணீர் வயல்வெளிகளில் தேங்கி வருவது குறிப்பிட்ட பயிர்களுக்கு ஏற்றதாக இல்லை.

தொடர் மழையால் தோட்ட பயிர்கள் பெரும் அளவில் பாதிப்படைந்துள்ளது. அதகப்பாடி, காரிமங்கலம், பென்னாகரம் உள்ளிட்ட பகுதியில் பயிர் செய்யப்பட்டுள்ள 400 ஏக்கருக்கு மேல் தக்காளி பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. மழைக்கு செடிகளில் உள்ள காய்கள், பழங்கள் அழுகியதோடு, தக்காளி செடியும் சருகாகும் நிலை ஏற்பட்டுள்ளது. மிட்டநூலஅள்ளி, அல்சென்னஅள்ளி, தர்மபுரி, செம்மாண்டகுப்பம், நாயக்கன்கொட்டாய், பாப்பிரெட்டிப்பட்டி

ஆகிய பகுதிகளில் பயிர் செய்யப்பட்டுள்ள மரவள்ளி செடிகள் தற்போது அறுவடை நடந்து வரும் நிலையில் மழையால் அறுவடை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
இப்பகுதியில் பயிர் செய்யப்பட்டுள்ள 100 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்களில் மரவள்ளி கிழங்கு அறுவடை முடியாத நிலையில் வயல்வெளிகளில் தேங்கும் தண்ணீரால் கிழங்குகள் அழுகி வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது. தர்மபுரி, பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, ராஜாபேட்டை, லளிகள், அரூர், நல்லம்பள்ளி, மொரப்பூர் உள்ளிட்ட பகுதியில் 600 ஏக்கருக்கு மேல் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வெற்றிலையை பொறுத்த வரையில் மிதமான தட்டவெப்ப நிலையும், மிதமான ஈர நிலையும் இருக்க வேண்டும். தற்போது பெய்து வரும் தொடர் மழைக்கு வெற்றிலை கொடிகள் சாய்ந்தும், இலைகள் பழுப்படைந்தும் வீணாகி வருகிறது. கொடிக்காலில் தேங்கும் தண்ணீரால், வேர்கள், தண்டுகள் அழுகி கொடிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர் மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும் அதே நேரத்தில் தோடப்பயிர்கள் நாசம் அடைந்து வருவதால், விவசாயிகள் கலக்கம் அடைந்திருப்பதோடு, பயிர் இழப்புக்கு உரிய நிவாரணம் வழங்கிட மாவட்ட நிர்வாகம் வருவாய் துறை மற்றும் வேளாண், தோட்டக்கலை துறை மூலம் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

**மழையால் கறுப்பாக மாறிய முருங்கைக்காய்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,03:18 IST

தாராபுரம்: தாராபுரம், மூலனூர், அறவக்குறிச்சி ஆகிய பகுதியில் தொடர்மழையால் முருங்கை காய் கறுப்பு நிறமாக உருமாறி, விலை பாதியாக குறைந்தது.தாராபுரம், மூலனூர், தொப்பம்பட்டி, கன்னிவாடி, சாலக்கடை, அரவக்குறிச்சி உள்பட பல்வேறு கிராமங்களில், குறைந்தளவு தண்ணீரில் வளரக்கூடிய முருங்கையை ஆயிரக்கணக்கான விவசாயிகள், பல ஆயரக்கணக்கான ஏக்கரில் பயிரிட்டுள்ளனர். முருங்கையின் காய், இலை, பூ உள்பட அனைத்து பொருட்களும் மருத்துவ குணம் கொண்டவை. உலகம் முழுவதும் நல்ல வரவேற்பு உள்ளது.

திருமண விருந்து, ஹோட்டல் ஆகியவற்றில் முருங்கைக் காய் முக்கிய பங்கு வகிக்கிறது. ஈரோடு, திருப்பூர், கரூர், திருச்சி, திண்டுக்கல், கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள், ஒட்டன்சத்திரம் மொத்த மார்க்கெட்டில் இருந்து வாங்கிச் செல்கின்றனர். இந்த

விலையை மையமாக வைத்துதான், சில்லரை வியாபாரிகள் விலைவைத்து பிற பகுதிகளில் விற்பனை செய்கின்றனர்.

சென்ற வாரம் முருங்கைக் காய் கிலோ 40 முதல் 50 ரூபாய் வரை விற்பனையானது. தொடர் மழையால் முருங்கை காய் கறுப்பாக நிறம் மாறியுள்ளது. மொத்த வியாபாரிகள் வாங்க தயங்குவதால் விலை திடீர் சரிவு ஏற்பட்டது. ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விற்பனையாவதால், முருங்கை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வாரமாக முருங்கைக் காய் முற்றிலும் பறிக்கப்பட்டு, வெறும் இலையாக காட்சியளிக்கிறது.

இன்னும் ஒரு மாதத்துக்கு பிறகுதான் முருங்கை பூ விட்டு, காய் பிடித்து, வளர்ச்சியடையும். முருங்கை மரங்களில் நன்கு முற்றிய முருங்கைக் காய் கறுப்பாக உருமாறி அழுகியதால், விவசாயிகளே பறித்து கீழே வீசியுள்ளனர். முருங்கை விவசாயிகள் நலன் கருதி, தாராபுரத்தில் முருங்கை பவுடர் தொழிற்சாலை அமைக்க, தமிழக அரசு முன் வர வேண்டுமென விவசாயிகள் விரும்புகின்றனர்.

**வேளாண் பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,00:38 IST

அரூர்: தர்மபுரி மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் நாயக்குத்தி, வேலனூர், நரிப்பள்ளி, பையர்நாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் வேளாண் வணிக பயிற்சி வகுப்பு நடந்தது.

வேளாண் உதவி அலுவலர்கள் ரங்கநாதன், சிவலிங்கம் ஆகியோர் மஞ்சள், நெல் போன்ற விளை பொருட்கள் அறுவடைக்கு பின் கடைப்பிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினர். பாசன விவசாயிகள் சங்க தலைவர்கள் லட்சுமணன், முருகன், பச்சை, பஞ்., தலைவர் சேட்டு, நல்லசிவம், ஆண்டி, சுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தொடர் மழையால் உயர்ந்தது கொப்பரை விலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,02:28 IST

பொள்ளாச்சி : தொடர் மழையால் தேங்காய் பறிப்பு மற்றும் கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், வெளி மார்க்கெட்டில் கொப்பரை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இரண்டு வாரத்தில் கிலோவுக்கு ஆறு ரூபாய் விலை உயர்ந்துள்ளது.தமிழகத்தில் மார்ச் மாதத்தில் இருந்து தேங்காய் சீசன் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, மழைதீவிரமடைந்துள்ளதால் தேங்காய் பறிப்பு, கொப்பரை உற்பத்தி முழுமையாக தடைபட்டுள்ளது.

இதனால், மார்க்கெட் சூடுபிடித்துள்ளது.நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 54 ரூபாய் முதல் 56 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின் 1,200 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 85 ரூபாயும் விலை கிடைத்தது.இதனால், தென்னந்தோப்பில் விவசாயிகள் பறித்து வைத்த தேங்காய் ஒன்றுக்கு அதிகபட்சமாக 9.75 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. வியாபாரிகள் பறித்துக்கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு ஒன்பது ரூபாயும், பறித்து உரிக்கப்பட்ட தேங்காய் ஒரு டன்னுக்கு 17 ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.ஒட்டுமொத்த தேங்காய் வர்த்தகமும் சூடுபிடித்து, விலை உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:ஒட்டு மொத்த தேங்காய் மார்க்கெட்சூடுபிடித்துள்ளதால், கடந்த இரண்டு வாரத்தில் கொப்பரை கிலோவுக்கு ஆறு ரூபாய் விலை உயர்ந்துள்ளது. தேங்காய் எண்ணெய் விலை டின்னுக்கு நூறு ரூபாயும், தேங்காய் விலை டன்னுக்கு ஆயிரம் ரூபாயும், தேங்காய் பவுடர் விலை கிலோவுக்கு 10 ரூபாயும் உயர்ந்துள்ளது. இதற்கெல்லாம் மூலதனமான தேங்காய் கொள்முதல் விலை தோப்புகளில் ஒரு ரூபாய் உயர்ந்துள்ளது.வரும் மார்ச் மாதம் தேங்காய் சீசன் துவங்கி வரத்து அதிகரித்தால் மட்டுமே கொப்பரை விலையில் மாற்றம் ஏற்படும். அதுவரையிலும் இதே நிலையில் கொப்பரை விலை சிறிய ஏற்ற இறக்கத்தில் இருக்கும்.இவ்வாறு, கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**சத்தான தீவனங்கள் கிடைப்பதில்லை கால்நடை வளர்ப்போருக்கு ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,02:39 IST

திருப்பூர் : குறைந்து வரும் கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்த, அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் கால்நடைப் புல் வளர்க்க மாவட்ட கால்நடைத்துறை அறிவுறுத்தி யுள்ளது.வளர்ந்து வரும் ரியல் எஸ்டேட் தொழிலால், விளைநிலங்கள் அழிக்கப்பட்டு மனைப்பிரிவுகளாக மாறி வருகிறது. இதனால், கால்நடைகளின் இயற்கை தீவன மான இலை தழைகள் அடியோடு அழிக்கப்படுகிறது.

விளைநிலங்கள் பலவும் காற்றாலைகள் மற்றும் தனியார் நிறுவன மொபைல் போன் டவர் அமைக்கும் பகுதிகளாக மாறி யதால் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழிலான, கால்நடை வளர்ப்பு வெகுவாக குறைந்து வருகிறது.
மாடு வளர்ப்பு குறைந்த போதும், பல பகுதிகளில் வெள்ளாடு வளர்ப்பு இருந்து வருகிறது. இறைச்சிக்காக நகர்ப்புறங்களில் வெள்ளாடுகளை வளர்க்கின்றனர். இத்தகைய ஆடு களுக்கு நகர்ப்புறத்தில், தேவையான தீவனம் கிடைப்பதில்லை. மசால் புல், முட்டைகோஸ் உள்ளிட்டவை களை விலைக்கு வாங்கி தீவனமாக கொடுத்து வளர்க்கின்றனர்.சரியான ஊட்டச்சத்து இல்லாத தால் வெள்ளாடுகள் அடிக்கடி நோய் வாய்ப்படும் வாய்ப்புள்ளது.

எனவே, நகர்ப்புறத்தில் இவற்றுக்கு தேவை யான ஊட்டச்சத்து வழங்கும் நோக்கில், ஆடுகளுக்கு ஆரோக்கியம் தரும் புற்களை வளர்க்க மாவட்ட கால்நடைத்துறை முடிவு செய்தது.
திருப்பூர் கால்நடை மருத்துவ மனையில் கடந்த இரு மாதங்களுக்கு முன், பயிரிடப்பட்ட கொழுக் கட்டை புல் நன்கு வளர்ந்து, சிகிச்சைக்கு கொண்டு வரப்படும் ஆடுகளுக்கு தீவனமாக வழங்கப் படுகிறது.

இதே போல், மாவட்டத் தில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் கால்நடைப் புல் வளர்க்க மாவட்ட கால்நடைத் துறை அறிவுறுத்தியுள்ளது.கால்நடைத்துறை உதவி இயக்குனர் பழனிச்சாமி கூறுகையில், " கொழுக்கட்டை புல், அகத்தி, முயல்மசால், கிளாசிரியா, கொத் துரை, வேலி மசால் உள்ளிட்ட கால் நடைகளுக்கு ஊட்டச்சத்தான புல் வகைகளை நட்டு பராமரிப்பது குறித்து, பரிசீலிக்கப்படுகிறது; அனைத்து கால்நடை மருத்துவமனை களுக்கும் இதுபற்றி அறிவுறுத்தப் பட்டுள்ளது' என்றார்.

### 500 ஏக்கர் நெற்பயிர் அழுகும் அபாயம் : திருச்சி மாவட்ட விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,01:06 IST

திருச்சி: திருச்சியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் திருவெறும்பூர் பகுதியில் 500 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது.
தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. பருவமழை மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வலுவாக பெய்து வருகிறது. இதனால் பல மாவட்டங்களில் ஆறுகள், ஏரி, குளங்கள் நிரம்பி வழிகின்றன. சில மாவட்டங்களில் வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளது.
திருச்சி மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அதிலும் குறிப்பாக கடந்த வியாழன், வெள்ளியில் தொடர்ந்து மழை பெய்தது.

இதனால் மாவட்டத்தின் பல இடங்களில் உள்ள ஏரி, குளங்கள் நிரம்பியுள்ளது. நிறைய இடங்களில் தண்ணீரால் சூழப்பட்டுள்ளது.
திருச்சி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் பெரிய அளவில் பாதிப்பு இல்லை என்றாலும், திருவெறும்பூர் பகுதியில் 500 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது.

திருவெறும்பூரை அடுத்துள்ள அரசன்குடி, கவுத்தரசநல்லூர், கிளிக்கூடு ஆகிய பகுதிகளில் 200 ஹெக்டர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் மழை நீரால் சூழப்பட்டுள்ளது. நேற்று காலை முதல் அதிக மழை இல்லாத காரணத்தால் திருவெறும்பூர் பகுதியின் வயல்வெளிகளில் புகுந்துள்ள நீர் வடியத் துவங்கியுள்ளது.

தொடர்ந்து மழை இல்லாமல் இருந்தால் வயலுக்குள் புகுந்த தண்ணீர் வடிந்து நெற்பயிர்கள் தப்பிக்கும். இல்லாவிட்டால் தண்ணீரில் மூழ்கியுள்ள நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழுகி நாசமாகும். திருவெறும்பூர் பகுதியில் விவசாய நிலங்களில் மழை நீர் புகுந்து 500 ஏக்கர் நெற்பயிர் பாதிக்கப்பட்டுள்ளதால் அந்த பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நெற்பயிர்களை காப்பாற்ற மாற்று ஏற்பாடு குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.
மாவட்ட வேளாண்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, ""திருவெறும்பூரில் நீர்பிடிப்பு அதிகம் உள்ள பகுதியில் 200 ஹெக்டர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது. ஆனால், தற்போது மழை நின்று விட்டதால் நீர் வடிந்து கொண்டுள்ளது. ஆகையால், பயிர்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்று கருதுகிறோம்," என்று தெரிவித்தனர்.

**தென்னை சாகுபடி கலந்துரையாடல் கூட்டம்**
பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2010,03:12 IST

ஈரோடு: தோட்டக்கலைத் துறை மற்றும் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம் சார்பில், தென்னை சாகுபடி குறித்த கலந்துரையாடல் கூட்டம் ஈரோடு மல்லிகை அரங்கில் நேற்று நடந்தது. கலெக்டர் சவுண்டையா தலைமை வகித்து பேசியதாவது: நெற்பயிரை குனிந்து பார்க்க வேண்டும். நெல் பயிரிடும் விவசாயிகள் குனிந்து விடக் கூடாது என்பதற்காக அரசே நெல் கொள்முதல் செய்கிறது.

கரும்புக்கு குனியத் தேவையில்லை. கரும்பு விவசாயிகள் சராசரியாக உள்ளனர். தென்னையை அன்னாந்து பார்க்க வேண்டும். தென்னை விவசாயிகள் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக நல வாரியம் அமைக்கப்பட்டது.


நல வாரியம் அமைக்கப்பட்ட பிறகு, நம் இஷ்டத்துக்கு சட்டம் இயற்றினால் விவசாயிகள் பயன்பெற முடியாது என்பதற்காக கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. கொள்கை முடிவு எடுக்கும் இந்த நிகழ்ச்சியில் விவசாயிகள் எதிர்பார்ப்பதை தெரிவிக்க வேண்டும். திட்டத்தை எப்படி செயல்படுத்துவது? திட்டத்தை எவ்வாறு வகுப்பது, அன்றாட பிரச்னை என்ன? என்பது குறித்து பேச வேண்டும். விவசாயிகளின் அனுபவத்தையும், அதிகாரிகளின் புத்தக அறிவையும் சேர்த்து நல்ல திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கீழ்பவானி பாசன சங்க தலைவர் நல்லசாமி பேசுகையில், ""இலங்கை உள்ளிட்ட நாடுகளில் தென்னை, பனையில் இருந்து மது தயாரித்து விற்கப்படுகிறது.  தமிழகத்தில் மட்டும் ஏன் தடை விதிக்கப்படுகிறது? கள் உணவின் ஒரு பகுதி என அரசியலமைப்பு சட்டமும், உச்சநீதிமன்ற தீர்ப்பும் கூறுகிறது. அரசியலமைப்பு சட்டத்தையும், உச்ச நீதிமன்ற தீர்ப்பையும் தமிழக அரசு மதிக்க வேண்டும். கள் இறக்க அனுமதிக்க வேண்டும்," என்றார்.

மேட்டூர் வலது கரை பாசன விவசாயிகள் சங்க பழனிசாமி பேசுகையில், ""தென்னையில் 40 ஆண்டுகளாக "ஈரியோபைட்' என்ற நோய் தாக்கி வருகிறது. இதற்கு முறையான மருந்து கண்டுபிடிக்கவில்லை. ஈரியோபைட்டை கட்டுப்படுத்த வேரில் மருந்து வைத்த 45 நாட்களுக்கு இளநீர் குடிக்கக் கூடாது என தெரிவிக்கின்றனர். அதன் பிறகு இளநீரில் விஷம் இருக்காதா? என்பதை தெரிவிக்க வேண்டும்,"என்றார். கூடுதல் வேளாண்மை இயக்குனர் ராமமூர்த்தி வரவேற்றார். தோட்டக்கலை துணை இயக்குனர் ராபர்ட் வின்சென்ட் நன்றி கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கடலோர மாவட்டங்களில் மீண்டும் மழை அளவு அதிகரிக்கும் வானிலை இலாகா அறிவிப்பு



தமிழகம் அருகே வங்கக்கடலில் மேக கூட்டம் சூழ்ந்து இருப்பதைக் காட்டும் செயற்கைக்கோள் படம்.

*சென்னை, நவ 29–*

*தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் மழையின் அளவு மீண்டும் அதிகரிக்கும் என்று, வானிலை இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.*

*சென்னை வானிலை மைய ஆராய்ச்சி இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–*

*பருவமழை தீவிரம்*

*வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. இலங்கையொட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை மன்னார் வளைகுடா வழியாக தென்மேற்கு தமிழகம் வரையில் நீடித்து உள்ளது.*

*இதன்காரணமாக தமிழ்நாட்டில் இன்று (திங்கட்கிழமை) கடலோர மாவட்டங்களில்*

அனேக இடங்களில் மழை பெய்யும். உள் மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யும்.

மீண்டும் கனமழை

கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் கனத்த மழையும், உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனத்த மழையும் பெய்யும். அடுத்த 48 மணி நேரத்துக்கு மழையின் அளவு குறையும்.

ஆனால், மேலடுக்கு சுழற்சி மற்றும் சில காரணங்களால் அடுத்த 72 மணி நேரத்தில் மீண்டும் மழையின் அளவு அதிகரிக்கும்.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

பெய்துள்ள மழை அளவு

நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு வருமாறு:-

பாம்பன், ராமேஸ்வரம் தலா 9 சென்டி மீட்டர்.

மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி தலா 7 சென்டிமீட்டர்.

திருவிடைமருதூர், முத்துப்பேட்டை, நீடாமங்கலம், தரங்கம்பாடி தலா 5 சென்டிமீட்டர்.

ஒரத்தநாடு, குடவாசல், நன்னிலம், திருவாரூர் தலா 4 சென்டிமீட்டர்.

காரைக்கால், கும்பகோணம், திருவையாறு, வல்லம், வலங்கைமான், மயிலாடுதுறை, சத்திரப்பட்டி, (திண்டுக்கல்) தலா 3 சென்டிமீட்டர்.

மாமல்லபுரம்

மாமல்லபுரம், திண்டிவனம், பாபநாசம், பட்டுக்கோட்டை, பேராவூரணி, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சை, கொள்ளிடம், சீர்காழி, நாகை, அறந்தாங்கி, ஆர்.எஸ்.மங்கலம், பரமக்குடி, ராமநாதபுரம், தொண்டி, சேரன்மகாதேவி, பாபநாசம்(நெரல்லை), ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி, கொடைக்கானல், தலா 2 சென்டி மீட்டர்.

செய்யூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், சேத்தியாதோப்பு, செஞ்சி, வேதாரண்யம், கந்தர்வகோட்டை, கரம்பக்குடி, கீரனூர், மணமேல்குடி, முதுகுளத்தூர், அம்பாசமுத்திரம், மணிமுத்தாறு, சிவகிரி, கோவில்பட்டி, சாத்தான்குளம், விளாத்திகுளம், கழுகுமலை, மயிலாடி, நாகர்கோவில், பேச்சிப்பாறை, தக்கலை, உடுமலைப்பேட்டை, ஜெயங்கொண்டம், லால்குடி, புள்ளம்பாடி, இளையான்குடி, அருப்புக்கோட்டை, சாத்துதூர், சிவகாசி, திண்டுக்கல், வேடசந்தூர் தலா ஒரு சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.